



Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 | இதழ் - 275 | 14.09.2024 | பக்கங்கள்: 09 | editorml21@gmail.com | விலை: 75/-

## தேசிய மக்கள் சக்தியின் இடைக்கால அமைச்சரவையில்

# வடக்கு - கிழக்கு - மலையக எம்.பிக்களுக்கு வாய்ப்பு!

## தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு!



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றவுடன், இலங்கை அரசியல் அடையாளத்தை பிரதி பலிக்கும் வகையில் இடைக் கால அரசாங்கம் அமைக்க முடியும் என தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். 02 ⏭

## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சேவையை கௌரவமாக கருதுவோம் - சஜித் பிரேமதாச

நாட்டின் வறுமையை போக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் அடித் தளம் இடுவோம். ஜனசவிய, அஸ்வெசும, கெமிதிரிய, சமுர்த்தி போன்ற வேலைத் திட்டங்களில் காணப்படுகின்ற சிறந்த விடயங்களை உள்ளடக்கி குறைபாடுகளை நிவர்த்தி செய்து, வறுமையை 24 02 ⏭



## பங்களாதேஷின் நிலைக்கு இலங்கை செல்வதை நான் தலையிட்டு தடுத்தேன் – ரணில் விக்கிரமசிங்க

நாட்டின் அரச அதிகாரத்தில் வெற்றிடம் ஏற்பட இடமளிப்பது பாரிய துயரத்துக்கு வழிவகுக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

எனவே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரச அதிகாரம் ஒரு தரப்பிடமிருந்து மற்றுமொரு தரப்பினருக்கு சுமூகமாக மாற்றப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். 02 ⏭



## சமூகவலைத்தளங்களில் அநுர வெற்றி 21ஆம் திகதி ரணில் வெற்றி பெறுவார்





–ருவன் விஜேவர்தன–

சமூக வலைத்தளங்களின் செய்திகளின் மூலம் அநுர குமார திஸாநாயக்க 02 ⏭

## சங்கு சின்னத்திற்கு மாத்திரம் வாக்களியுங்கள் - அரியநேந்திரன் தெரிவிப்பு!



ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னத்திற்கு மாத்திரமே வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு விருப்பு வாக்கு போட வேண்டாம் என தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். யாழில் நேற்று வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

எட்டு மாவட்டங்களிலும் எமது பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எதிர்பார்த்த 02 ⏭

## தேர்தல் பிரச்சாரங்கள் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் நிறைவு — தேர்தல் ஆணைக்குழு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரச்சார நடவடிக் கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் பிறகு, எந்தவொரு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளையும் நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டு ள்ளதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## தேசிய மக்கள் சக்தி இடைக்கால...

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சமரசிங்க, வடக்கு மற்றும் கிழக்கின் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்கள் மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இந்த இடைக்கால அரசாங்கத்தை அமைக்க தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளதாக கோடிட்டு காட்டினார்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்தை உருவாக்க விரும்புகிறோம். சிங்கள அரசாங்கம் அல்ல என்று சமரசிங்க கூறினார். அரசாங்கம் அல்லாத எம்.பி.க்களும் அமைச்சரவையில் நியமிக்கப்படும் வரலாற்று முதல் அரசாங்கம் இதுவாகும்.

பாராளுமன்றத்தில் உள்ள 222 உறுப்பினர்களில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த நல்ல பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளதாகவும், அவர்களே இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் சமரசிங்க தெரிவித்தார்.

“ஆரம்பத்தில் எமது அமைச்சரவையில் தோழர் அநுர உட்பட நான்கு பேர் இருப்பார்கள். மேலும் விவாதங்களுக்குப் பிறகு, நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில், அமைச்சரவை ஏழு அல்லது எட்டு உறுப்பினர்களாக விரிவாக்கப்படலாம். ”ஒரே நேரத்தில் சரியாக 25 உறுப்பினர்களை நியமிக்க கடுமையான தேவைகள் எதுவும் இல்லை,” என்று அவர் மேலும் கூறினார்

## பங்களாதேஷின் நிலைக்கு இலங்கை...

இன்று பங்களாதேஷ*க்குள் அவ்வாறான நிலையே ஏற்பட்டிருப்பதாகவும் அந்த நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பங்களாதேஷ் தவறியிருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2022 ஆம் ஆண்டு இலங்கையிலும் நாட்டில் அவ்வாறானதொரு நிலை ஏற்படவிருந்ததாகவும் அதனை தானே தலையிட்டு தடுத்திருந்தாகவும் சுட்டிக்காட்டினார்.

‘ஆரோக்கியமான எதிர்காலத்துக்காக வைத்தியர்கள்’ என்ற தொனிப்பொருளில் வியாழக்கிழமை (12) பிற்பகல் பத்தரமுல்லை வொர்டஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற வைத்தியர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க கடந்த இரண்டு வருடங்களில் அடைந்த பொருளாதார முன்னேற்றம் மற்றும் எதிர்கால நிலைமைகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

இதன்போது வைத்தியர்கள் தங்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் நேரடியாக எடுத்துரைத்ததுடன் ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கினார்.

இதன்போது கடந்த இரண்டு வருடங்களில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இந்நாட்டின் வைத்தியர்கள் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவித்தார்.

பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வேளையில், ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு வழங்கப்படும் என்பதோடு, வைத்தியர்களின் எதிர்பார்ப்புக்களையும் சம்பளத்தையும் சிறந்த வகையில் பெற்றுக்கொடுப்பதே தனது இலக்காகும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரமும், அரசியல் கட்டமைப்பும் சரிவடைந்துள்ளதால், அனைத்தையும் மீளக்கட்டியெழுப்ப வேண்டும் எனவும், ‘இயலும் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தினால் புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## சங்கு சின்னத்துக்கு மாத்திரம்...

வாக்குக்களை விட அதிக வாக்குகள் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு வந்துள்ளது.

மக்களிடம் நாம் சங்கு சின்னத்திற்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டும் என்றே கோரி வருகிறோம். ஆனால் சிலர் சங்கு சின்னத்துக்கு வாக்களித்த பின்னர் விரும்பிய மற்றைய வேட்பாள ருக்கு வாக்களிக்குமாறு சிலர் கூறுகின்றனர். இது எனதோ, பொது கட்டமைப்பை சார்ந்தவர்களுடைய கருத்தோ இல்லை. தற்போதைய நிலவரப்படி எவருமே 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது.

அதனால் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் வடக்கு கிழக்கில் முகாமிட்டு பிரச்சாரங்களை முன்னெடுக்கின்றனர்.

நல்லூர் திருவிழாவிற்கு காப்புக்கடை போடுவது போன்று, கொக்கட்டிசோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயத்தில் இனிப்புக்கடை போடுவது போன்று, வடக்கு கிழக்கில் வந்து தங்கி பிரச்சாரம் செய்கின்றனர்.அவர்களுக்கு முகவர்களாக சில தமிழர்கள் செயற்படுகின்றனர். எமது இனத்திற்காக அவர்கள் சிந்தித்து சங்கு சின்னத்திற்கு ஆதரவு வழங்க முன் வரவேண்டும். என மேலும் தெரிவித்தார்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சேவையை...

மாதங்களுக்குள் ஒழிப்பதற்காக மாதம் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்குவதோடு, அதுக்கு மேலதிகமாக மூலதனங்களையும் வழங்கி புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

இந்த சந்தர்ப்பத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வழங்குகின்ற சேவையை கௌரவமாக கருதுவோம். இந்த திட்டத்தை பலமாக முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை (13) நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக கொவிட் காலத்தில் அரசாங்கத்திற்கு கடன் பெறவும் முடியுமாக இருந்தது. தற்போதைய அரசாங்கம் அந்த கடனை செலுத்துவும் இல்லை.

கடனுக்கான வட்டியைச் செலுத்துவும் இல்லை. அரசாங்கம் 43 பில்லியன் ரூபா கடனை மீளச் செலுத்த வேண்டி இருக்கின்றது.

சமுர்த்தி வேலைத்திட்டத்தை எவரேனும் வீழ்த்துவதற்கு முயற்சி செய்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்களின் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வினை பெற்றுக் கொடுத்திருக்கின்றோம் .

பதவி உயர்வு குறைபாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்போம். சமுர்த்தி கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டவர்களுக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுப்போம்.

அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தியின் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் பணம் வழங்கும் வேலைத்திட்டம் அல்ல. இதன் ஊடாக வறியவர்களை வறுமையிலிருந்து மீட்கின்ற வேலைத்திட்டமாகும். அதற்காக சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியமானது என்றார்.

## சமூகவலைத்தளங்களில் அநுர வெற்றி...

வெற்றிபெற்றாலும் 21ஆம் திகதி மக்களின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவது உறுதியாகும்.

அதேநேரம் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி உறுதி என்பதால் அமைச்சர்கள் யாரும் நாட்டைவிட்டுச் செல்ல எந்த தேவையும் இல்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் வியாழக்கிழமை (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகாண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெற இருக்கும் நிலையில் சமூக வலைத்தள செய்திகள் மூலம் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி எப்போதும் சமூக வலைத்தளங்களை பயன்டுத்திக்கொண்டு, மக்களை திசை திருப்பும் வகையில், போலியான கருத்துக் கணிப்பீடுகளை வெளியிடுவது வழமையான விடயமாகும்.

அதன் பிரகாரமே தற்போதும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் எத்தனை வாக்குகள் எடுப்பார்கள் என்பது வெளியிடப்பட்டிருக்கிறது. அதனால் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் வாக்கு எண்ணிக்கையில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறுவார்.

ஆனால் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மக்களின் வாக்குகளால் ரணில் விக்ரமசிங்க வெற்றிபெறுவது நிச்சயமாகும்.

அதனால் போலி பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாறப்போவதில்லை. யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர்.

மேலும் அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெறுவார் என்ற செய்தி சமூக வலைத்தளங்களின் பரவிய செய்தியை நம்பி, கடந்த ஒரு வாரமாக பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்துள்ளது.

அதிகமான முதலீட்டார்கள் தங்களின் பங்குகளை விற்பனை செய்து வருவதாக அறியக்கிடைக்கிறது. ஏனெனில் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள உடன்படிக் கையை மாற்றுவதாகவும் அதில் இருக்கும் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.அதனால் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்படும் என்ற அச்சத்திலேயே முதலீட்டார்கள் வெளியேறுகின்றனர்.

அதேநேரம் எதிர்வரும் 21ஆம் திகதி வாக்களித்துவிட்டு வெளிநாடுகளுக்கு செல்ல 80 வீதமான அமைச்சர்கள் வீசா எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்து வருகிறது என்றார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## சிறந்த தலைவரை தெரிவு செய்ய வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 09 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஒரு கோடி 71 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களது வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 39 பேர் அபேட்சகர்களாக போட்டியிடவுள்ளனர். இதே வேளை ஜனாதிபதி தேர்தல் நாடு முழுவதிலும் உள்ள 13,000 வாக்கெடுப்பு நிலையங்களில் இடம்பெறவுள்ளது. அத்துடன் 45 வாக்கெண்ணும் நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படா வண்ணம் பாதுகாப்பு கடமைகளுக்காக 54 ஆயிரம் போலிசார் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டிலுள்ள அனைத்து மக்களின் எதிர்பார்ப்பையும் நிறைவு செய்வோம் என்பதாக இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற அத்தனை அபேட்சகர்களும் மேடைகளில் கூறி வருகின்றனர். கடந்த காலங்களில் பயங்கரவாதம், இனவாதம் போன்ற விடயங்களை முன்னிறுத்தி தேர்தல் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இம்முறை நாட்டின் பொருளாதாரம், மக்களுக்கான சுபீட்சம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றது.

ஆகையால் தேர்தலில் வாக்களிக்க முன்னர் நன்றாக சிந்தித்து எதிர்வரும் 05 வருடங்களுக்கு மக்கள் நலனில் அக்கறை செலுத்தக் கூடிய சிறந்த தலைவர் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும். அப்போது தான் நாட்டின் பொருளாதார கட்டமைப்பை சிறப்பாக முன்னெடுத்து செல்ல வாய்ப்பாக அமையும்.

editorml21@gmail.com

## ஈராக்கில் அமெரிக்க இராணுவ தளம் மீது குண்டுவெடிப்பு



ஈராக் தலைநகர் பாக்தாத் விமான நிலையம் அருகே உள்ள அமெரிக்க இராணுவ தள வளாகத்தில் குண்டென்று வெடித்துள்ளது.

அமெரிக்க இராணுவம் பயன் படுத்திய தளத்தைக் குறிவைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் இம்மாதம் 11ம் திகதி பாக்தாத்துக்குச் செல்லவுள்ள நிலையிலேயே இத்தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## பிலிப்பைன்ஸில் உருவான யாகி சூறாவளி சீனாவை தொடர்ந்து வியட்நாமை மிரட்டியது



வடக்கு வியட்நாமின் குவாங் நின், ஹைடாங் மற்றும் ஹோா பின் ஆகிய கடலோர மாகாணங்களை குறிவைத்து யாகி சூறாவளி வீசியது. மணிக்கு 149 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசி தலைநகர் ஹனோயில் யாகி சூறாவளி கரையை கடந்தது.

வியட்நாமில் இந்த நூற்றாண்டின் மிக பயங்கரமான புயலாக கருதப்படும் இந்த யாகி, அந்த நாட்டை முழுவதுமாக உலுக்கியது.

இந்நிலையில் அங்குள்ள மலைபாங்கான காவ் பாங் மாகாணத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனிடையே அங்கே ஆற்றின் குறுங்கே கட்டப்பட்டிருந்த இரும்பு பாலம் ஒன்று இரண்டு துண்டுகளாக உடைந்து ஒரு பகுதி ஆற்றில் மூழ்கியது.

அப்போது அந்த பாலத்தில் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று ஆற்றில் விழுந்து வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இந்த பஸ்சில் பயணித்த 20 பேரும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். தகவலறிந்த மீட்புத்துறையினர் பஸ் பயணிகளின் உடல்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் வியட்நாமில் சூறாவளி பாதிப்புக்கு பலியானோர் எண்ணிக்கை தற்போது 64 ஆக உயர்ந்ததாக அந்த நாட்டின் பேரிடர் நிர்வாகம் தகவல் அளித்துள்ளது. வியட்நாமைத் தாக்கும்முன், யாகி புயல் கடந்த வாரம் பிலிப்பைன்சில் 20 உயிர் இழப்புகளையும், தெற்கு சீனாவில் நான்கு பேரையும் பலிவாங்கியது குறிப்பிடத்தக்கது.

## சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு சிறார்களுக்கு தடை விதித்த அவுஸ்திரேலியா

மன மற்றும் உடல் ஆரோக்கியம் பற்றிய கவலைகளை மேற்கோள் காட்டி, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு குழந்தை களுக்கு குறைந்தபட்ச வயது வரம்பை நிர்ணயிக்க அவுஸ்திரேலியா உத்தேசித்துள்ளது.

பிரதம மந்திரி என்டனி அல்பானீஸ், தனது மத்திய-இடது அரசாங்கம் இந்த ஆண்டு சமூக ஊடகங்களுக்கான குறைந்தபட்ச வயதுச் சட்டங்களை அறிமுகப் படுத்துவதற்கு முன் வயது சரிபார்ப்பு சோதனையை நடத்தும் என தெரிவித்துள்ளார். அல்பானீஸ் வயதைக் குறிப்பிடவில்லை, ஆனால் அது 14 முதல் 16 வரை இருக்கலாம் என்று கூறினார்.

குழந்தைகளை அவர்களின் சமூக ஊடக சாதனங்களில் இருந்து விலக்கி, கால் நடைகள், நீச்சல் குளங்கள் மற்றும் டென்னிஸ் கோர்ட்டுகளில் பார்க்க விரும்புகிறேன் என்று அல்பனீஸ் அவுஸ்திரேலிய ஒலிபரப்பு நிறுவனத்திடம் கூறினார்.



சமூக ஊடகங்கள் சமூகத்திற்கு தீங்கு விளைவிப்பதாக நாங்கள் அறிந்திருப்பதால், அவர்கள் உண்மையான நபர்களுடன் உண்மையான அனுபவங்களைப் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், என்று அவர் மேலும் கூறினார்.

சமூக ஊடகங்களில் வயதுக் கட்டுப்பாட்டை விதித்த உலகின் முதல் நாடுகளில் இந்தச் சட்டம் அவுஸ்திரேலியாவை சேர்க்கும்.

சிறார்களின் ஒன்லைன் உரிமைகளைக் குறைப்பது குறித்த புகார்களைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் உட்பட முந்தைய முயற்சிகள் தோல்வியடைந்தன.

## அறிமுகமாகிறது Appleஇன் புதிய வகை 16 சீரிஸ் ஐபோன்கள்

அப்பிள் நிறுவனம் தனது நவீன தொழில்நுட்ப ஐபோன் 16 சீரிஸ் மொடல்கள், ஸ்மார்ட் வொட்ச் மொடல்களை அறிமுகப்படுத்தியது.

முன்னணி நிறுவனமான அப்பிள் தனது ஸ்மார்ட் போன் சீரிஸ் 16, கம்ப்யூட்டர் மற்றும் ஐபோன்கள் ஸ்மார்ட் வொட்ச்கள் ஆகியவற்றின் தயாரிப்புகளை ஆண்டுதோறும் செப்டெம்பரில் அறிமுகம் செய்து வருகிறது.

இதன்படி இன்று அமெரிக்காவின் கலிபோர்னியாவின் குபெர்டினோவிலுள்ள நிறுவனத்தின் தலைமையகத்தில் அப்பிள் நிறுவனத் தயாரிப்புகள் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.


இந்நிகழ்வில் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய ஐபோன் 16, சீரிஸ், மொடல்கள் ஸ்மார்ட் வொட்ச்கள் என பல்வேறு மொடல்களை அறிமுகப்படுத்தியது.

## 17 கிலோ எடையை கொண்டுள்ள பூனை

ரஷ்யாவில் 17 கிலோ எடையை கொண்டுள்ள பூனை ஒன்று உடல் எடை அதிகரித்து சிகிச்சையில் இருக்கும் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவில் க்ரோஷிக் என்ற பூனை தான் இவ்வாறு எடைகூடி சிகிச்சையில் உள்ளது.

தற்போது இந்த பூனையால் நடக்க கூட முடியாத நிலையில் இருப்பதாக செய்தி வெளியாகி உள்ளது.பொதுவாக வீட்டில் வளர்க்கப்படும் பூனைகள் சுமார் 4-5 கிலோகிராம் எடையுள்ளதாக இருக்கும்.

ஆனால் 17 கிலோ எடையை கொண்டுள்ள இந்த பூனை நகர முடியாத அளவிற்கு உடல் எடை அதிகரித்து காணப்படுவதால் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இது தின்பண்டங்களை விரும்பி உண்பதற்கு பெயர் பெற்ற பூனையாகும். இதனால் சிறுவய-திலேயே உடல் எடை அதிகரித்து காணப்பட்டுள்ளது.

தற்போது இந்த பூனை Matroskin என்ற தங்குமிடத்தில் மறுவாழ்விற்காக மேற்கு ரஷ்யாவில் உள்ள பெர்மில் உள்ள ஒரு மருத்துவமனையின் அடித்தளத்தில் இந்த பூனை தங்கவைக்கப்பட்டுள்ளது.

## ஒரே நாளில் 23 பற்கள் பிடுங்கப்பட்ட நபர் பரிதாபமாக உயிரிழப்பு

சீனா நாட்டில் ஒரே நாளில் 23 பற்கள் பிடுங்கப்பட்ட நபரொருவர் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீன நாட்டின் ஜெய்ஜியாங் பிராந்தியத்தில் உள்ள ஜின்ஹுவா நகரில் யோங்காங் டேவே பல் மருத்துவமனையில் கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதி ஹுவாங் என்ற நபருக்கு மாற்று பற்கள் பொருத்தும் இம்பிளான்ட் அறுவை சிகிச்சை மேற்கொள்ள-ப்பட்டுள்ளது.

அறுவை சிகிச்சையின்போது அவரின் 23 பற்களும் பிடுங்கப்பட்டு அதே நாளில் 12 புதிய பற்கள் இம்மீடியேட் ரெஸ்டோரேஷன் முறை இம்பிளாட் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மருத்துவமனையில் இருந்து திரும்பிய அவர் இரண்டு வாரங்கள் கழித்து ஆகஸ்ட் 28 ஆம் திகதி திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பாக அவரது மகள் கடந்த சமூக வலைதளத்தில் தெரிவித்ததை அடுத்து இந்த சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உயிழந்தவரின் வயது வெளிப்படுத்தப்படவில்லை. இதுதொடர்பாக அந்த மருத்துவ-மனை நிர்வாகத்திடம் விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில் ஒரே நாளில் 23 பற்களும் பிடுங்கப்படுவது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பலர் தங்களது அதிர்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

EAST லீடர்

# முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் தலையை பரிசோதனை செய்ய வேண்டும்

## சாய்ந்தமருதில் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க



(ஸைபுல் ஹபீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸ்ஸாநாயக்க ஜனாதிபதியானால் முஸ்லிம் மக்களின் மதச் சடங்குகளை இல்லாமல் செய்வார் என முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லா கூறி வருவது தேர்தலில் வாக்குகளை பெறுவதற்காக மக்களை ஏமாற்றும் செயலாகும் எனவும் அவரின் தலையை பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் அநுர குமார திஸ்ஸாநாயக்க சாய்ந்தமருதில் நேற்று (13) இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கிற்கு ரணில் விக்ரமசிங்க வரும்போது முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ்வையும் சஜித் பிரேமதாச வரும் போது முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிஷாட் ஆகியோரை நம்பியே வருகை தருகின்றனர் ஆனால் நாங்கள் அவ்வாறு அல்ல மக்களை நம்பியே இப்பிரதேசத்திற்கு வருகை தருகின்றோம்.

இந்த நாட்டில் உளுந்து, கௌபி, வெங்காயம் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. இது மக்களின் நலனை கருத்தில் கொண்டு அல்ல அமைச்சர்கள் தங்களது உழைப்பிற்காகவும் சுகபோகங்களை அனுபவிப்பதற்காகவும் தவிர வேறு எதுவும் இல்லை நாங்கள் ஆட்சிக்கு வரும்போது அவற்றை இல்லாமல் செய்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்போம்.

சஜித் பிரேமதாச கிழக்கு வரும் போது ரவூப் ஹக்கீம், றிஷாட் ஆகியோரை அழைத்துக் கொண்டு வருகின்றார் ஆனால் சம்பிக்க ரணவக்கவை அழைத்து வருவதில்லை. அதேபோல் தெற்கிற்கு செல்லும் போது சம்பிக்க ரணவக்கவை அழைத்து கொண்டு ரவூப் ஹக்கீம், றிஷாட் ஆகியோரை அழைத்து செல்வதில்லை. இவ்வாறு அரசியல் ஏமாற்றுக்களை மக்களிடம் காட்டி வருகின்றார்கள்.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் ஜனாதிபதி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இல்லாமல் செய்யப்படும் அதேபோல் பாராளுமன்றத்தில் 25 அமைச்சர்களாக மட்டுப்படுத்தப்படும். அமைச்சர்கள் செல்லும் வாகனத்திற்கு பின்னால் செல்லும் வாகன தொடரணி இல்லாமல் செய்யப்படும். அவர்களின் வீடுகளுக்கான மின்சார. தொலைபேசி, நீர்க் கட்டணங்கள் அரசாங்கத்தால் செலுத்தப்படமாட்டாது. இவ்வாறு பல வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கு உறுதி கொண்டு உள்ளோம்.

நாங்கள் ஒருபோதும் எந்தவொரு மதத்தினரதும் மதக் கொள்கைகளுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் எந்த கட்டுப்பாடுகளையும் விதிக்கப்போவதில்லை. மக்களை குழப்புவதற்கான யுக்தியாகவே இதனை கூறிவருகின்றனர். இப்பிரதேசத்தில் காணப்படும் ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மீனவர்களின் ஜீவனோபாயத்தை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

இந்த இலங்கையை கள்வர்களிடமிருந்து காப்பாற்றி வங்குரோத்து அரசியலை இல்லாமல் செய்து மீண்டும் சுபீட்சமான இலங்கையாக மாற்றியமைப்பதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு எனவும் தெரிவித்தார்.

# இணைந்த கரங்கள் அமைப்பால் உதவி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த மாதம் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வீடு மற்றும் அனைத்து உடமைகளும் முற்றாக எரிந்து பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்த ஒலுவில் பிரதேசத்தில் வசிக்கும் குடும்பமொன்றுக்கு உலர் உணவுப் பொருட்களும், காரைதீவு சண்முகா மகாவித்தியாலயத்திலும், திராய்கேணி அ.த.க. பாடசாலையிலும் கல்வி பயிலும் அக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் லோ.கஜரூபன்,காந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் ஜனாதிபதி தேர்தலுக்காக இரு பாடசாலைகள் மூடப்பட்டது



(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணும் நடவடிக்கை நடைபெறவுள்ள கிழக்கு மாகாணத்தில் இரண்டு பாடசாலைகள் முன்கூட்டியே மூடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, திருகோணமலை மாவட்டத்தில் வாக்கு எண்ணும் நிலையமாகப் பயன்படுத்தப்படும் விபுலானந்த மகா வித்தியாலயமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்கு எண்ணும் நிலையமாகப் பயன்படுத்தப்படும் இந்துக் கல்லூரியும் புதன்கிழமை (11) முதல் மூடப்பட்டுள்ளது என மாகாணக் கல்விச் செயலாளர் எச்.ஈ.எம்.ஜி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன், வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள ஏனைய பாடசாலைகளும் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலைகள் 23ஆம் திகதி வழக்கம் போல் திறக்கப்படும் என்றும், வாக்கு எண்ணும் மையங்களுக்கு பயன்படுத்தப்படும் இரண்டு பாடசாலைகள் 24ஆம் திகதி திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரு தேசிய விருதுகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சுகாதார நிறுவனத்தினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதார தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு, நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இரு சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன.

இருநூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்குள் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற போட்டியில் வட மாகாணத்தில் இருந்து மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலை மாத்திரமே இந்த சிறப்பு விருதை வென்றுள்ளமை குறிப்பிட்டதக்கது.

இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் அலோகா சிங்கா, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஆஸாத் எம் ஹனீபா விருதுகளை பெற்றுக் கொண்டார்.

# கிண்ணியா சிறுவன் அக்லான் பிலால் உலக சாதனை



(எம்.ஏ.முகமட்)

ஐக்கிய இராச்சியத்தை தலைமையகமாக கொண்ட உலகளாவிய சாதனை புத்தக நிறுவனத்தினால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில் கிழக்கு மாகாணத்தின் கிண்ணியா குறிஞ்சாக் கேணியைச் சேர்ந்த 4 வயதையுடைய மாணவன் நஸ்மி அக்லான் பிலால் புதிய உலக சாதனையாளனாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். இச்சிறுவன் பத்தின் 100ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2 நிமிடம் 12 செக்கன்களில் வேகமாகக் கூறி இச்சாதனையை நிகழ்த்தினார்.

இச்சாதனை செய்தமைக்காக மேற்படி குறித்த நிறுவனத்தினால் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

**(ஸைபுல் ஹபீஸ்)**



திருமலை குச்சவெளி அந் நூரியா கனிஷ்ட பாடசாலையில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக் கான பரிசளிப்பு நிகழ்வு அதிபர் எம்.கே.முபீன் தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது

இந் நிகழ்வில் குளோபல் ரிலீப் டீன் அன்ட் சன்ஸ் பணிப்பாளர் அன்வர்தீன் முகம்மது ஆதில், குச்சவெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கங்கேஸ்வரன் மற்றும் பள்ளித் தலைவர்கள் ஏனைய பாடசாலை அதிபர்கள் நலன் விரும்பிகள் பெற்றோர்கள் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அரசியல் பிரமுகர்கள் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வு பாடசாலை கல்வி அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம் பெற்றது. இதற்காக அயராது பாடுபட்ட செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு அதிபர் எம்.கே.முபீன் நன்றியை தெரிவித்துள்ளார்.

# புத்தளம் கலாச்சார மண்டபத்தில் இரத்த தான முகாம்

**(எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் 2003 க.பொ.த.(சா/த) குழுவினரான சஹீரியன்ஸ் ட்யூட்ஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து புத்தளம் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலை யில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் அண்மையிலே புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனை கருத்தில் கொண்டே இந்த பழைய மாணவர் சங்கம் இரத்ததான நிகழ்வுதனை உடனடியாக ஏற்பாடு செய்துள்ளது. பெண்களும் இரத்தம் தானம் செய்வதற்கான விரிவான பிரத்தியேகமான இட அமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தளம் தள வைத்தியசாலை யுடைய இரத்த வங்கி பொறுப்பாளர் டாக்டர் மெரீனா தலைமையில் நடைபெறவுள்ள இந்த இரத்ததான நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு ஆர்வத்தோடு இரத்த தானத்தை வழங்குமாறு பழைய மாணவர் சங்கத்தினர் வேண்டு கோள் விடுத்திருக்கின்றனர்.

# புலம்பெயர் தொழில் பாதுகாப்பு மற்றும் ஆட்கடத்தலை தடுக்கும் கிராம மட்ட விழிப்புணர்வு

**(நூருல் ஹுதா உமர்)**



பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத் தலுக்கு உள்ளாதல் தொடர்பான விழிப்புணர்வு வேலைதிட்டத்தை மனித அபிவிருத்தி தாபனம் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் ஆட்கடத்தலை எதிர்த்து சமூதாய நியாய பிரசாரம் எனும் செயற்பாட்டி னூடாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர், கல்முனை, காரைதீவு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

விழிப்புணர்வு நிகழ்வுகளுக்கு கிராம மட்டங்களில் பிரச்சினை- க்கு உட்பட்டவர்கள், கிராம மட்ட தலைவர்கள் மற்றும் பெண்கள் என பலரும் பங்குபற்றினர்.

மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட பிரதி இணைப்பாளர் எம்.ஐ.றியாழின் நெறிப்படுத்தலில் நடைபெற்று வரும், இவ் விழிப்புணர்வு செயற்பாடுகளில் குறித்த பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் மற்றும் ஆட்கடத்தலுக்கு உள்ளாதல் தொடர்பாக மக்களை விழிப்பூட்டி தெளிவுபடுத்தி வருகின்றனர்.



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் சாய்ந்தமருது காரியாலய திறப்பு விழாவும் பொது கூட்டமும் முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டார்.
**(படம் : எஸ்.எம்.எம்.றம்ஸான்)**

# பாத்திமா நப்ரா தேசிய விருது பெற்றார்



**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

அல் ஹசீனா ப்ரைடல்ஸ் அகடமி ஏற்பாட்டில் தென்னிந்திய பிரபல நடிகை மீனா சாஹர் கலந்து கொண்ட குலோரியஸ் ஐகொனிக் தேசிய விருது வழங்கும் விழா- 2024 அண்மையில் கொழும்பு காலி முகத்திடலில் உள்ள கோல் பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இவ்விழாவில் கிழக்கு மாகாண- த்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிறந்த அழகுக்கலை நிபுணர் மற்றும் சரும பராமரிப்பாளருக் கான தேசிய விருதினை எம்.என்.பாத்திமா நப்ரா பெற்றுக் கொண்டார்.

மேலும் இவ்விழாவில் கலைஞர்கள், ஊடகவியலாளர் கள், புகைப்படப்பிடிப்பாளர்கள், நடிகர்கள், பாடகர்கள், சிகை அலங்காரம், அழகுக்கலை நிபுணர்கள், தொலைக்காட்சி தயாரிப்பாளர் ,சமூக சேவையா- ளர்கள், சாதனையாளர்கள் என பலருக்கு நடிகை மீனா சாஹர் விருதுகள் வழங்கி கௌரவித்- தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட முஸ்லிம் சமய கலாசார போட்டியில் நிந்தவூர் அஷ்ரக் வித்தியாலயம், கல்முனை ஸாஹிரா என்பன சாதனை

**(நூருல் ஹுதா உமர்)**




கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முதன் முதலாக நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட முஸ்லிம் சமய கலாசார போட்டியில் கல்முனை கல்வி வலய, நிந்தவூர் கல்வி கோட்ட அல்-அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) மாணவர் உமர் அலி அப்துல் நாபி அலி முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி அதான் ஒலித்தல் போட்டியில் முதலிடம் பெற்று சாதித்துள்ளார்.

கொழும்பு சாஹிரா கல்லூரி- யில் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் வெற்றி வாகை சூடிய இம்மாணவனுக்கும், பொறுப்பாசிரியர்களுக்கும் மற்றும் அழைத்துச் சென்று வழிநடாத்திய தாய் தந்தையருக்கும் அல்-அஷ்ரக் சமூகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வலய மட்டம், மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற கல்முனை ஸாஹிரா கல்லூரி கலிகம்பு கலை அணியினர் அகில இலங்கை தேசிய மட்ட போட்டியிலும் கலந்து கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனையை புரிந்துள்ளனர்.

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு மயக்கமருந்து இயந்திரம் வழங்கி வைப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நிந்தவூர் ஆதார வைதியசாலை யின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அத்தியாவசியத் தேவையாகக் காணப்பட்ட மயக்க மருந்து இயந்திரம் மற்றும் மகப்பேற்று விடுதிக் குரிய சீ.ரி.ஜி இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாகாண அரசின் பி.எஸ்.டீ.ஜி வேலைத்திட்டத்தின் கீழ் சுமார் 10 மில்லியன் ரூபா நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட குறித்த மருத்துவ உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் (09) நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டாக்டர் எம்.எஸ். எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு குறித்த உபகரணங்களை வழங்கி வைத்தார்.



இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என். எம்.இப்ஹாம், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி தேர்தல் - 2024

# வர்த்தகம், விவசாயத்தை வலுப்படுத்த யாரால் முடியும் என முஸ்லிம் காங்கிரஸிடம் கேளுங்கள்!

## சாய்ந்தமருதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

உரங்களின் விலைகளை குறைப்பதாகவும் விவசாயக் கடன்கள் வெட்டிவிடுவதாகவும் அறிவிக்கும் சஜித்தும் அநுரவும் இந்நாட்டு விவசாயிகள் உரமின்றி தவிக்கும் போது எங்கே இருந்தார்கள் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பினார்.

தாம் உலகத் தலைவர்களுடன் பேசி உர மானியங்களைப் பெற்றுக்கொடுக்க பாடுபட்டதன் காரணமாகவே விவசாயியை மீண்டும் வயலுக்கு அனுப்பி நாட்டில் அரிசி உற்பத்தியை அதிகரிக்க முடிந்ததையும்



ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

இன்று மக்களின் வாழ்க்கைச் சுமை பற்றிப் பேசும் சஜித்தும் அநுரவும் கடந்த பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க எவ்வித ஆதரவையும் வழங்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்கள் க்'டப்படும் போது ஓடியவர்களே இன்று அவர்களின் எதிர்காலத்திற்காக அதிகாரம் கேட்கின்றனர் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை (11) இரவு சாய்ந்தமருது பௌஸி விளையாட்டரங்கில் நடைபெற்ற ரணிலால் இயலும் வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பேரணியில் பெருமளவான மக்கள் கலந்து. கொண்டனர்.

இந்த மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டில் முஸ்லிம்களின் பிரதான வருமானமாக இருக்கும் வர்த்தகம் மற்றும் விவசாயம் என்பன இல்லாமல் போனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும். எனவே இந்த நாட்டில் வியாபாரத்தையும் விவசாயத் தையும் வலுப்படுத்துவது யாரால் முடியும் என்பதை முஸ்லிம் காங்கிரஸிடம் கேட்கும் படி அங்கு குழுமியிருந்த மக்களிடம் கோரிய ஜனாதிபதி, தான் திட்டங்களுடனே மக்கள் முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இன, மத பிரச்சினைகளை முன்னிறுத்தி தேர்தலை நடத்தமாட்டோம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, முஸ்லிம் மக்களுக்கு இறந்தோரின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையை சட்டத்தின் மூலம் வழங்கவுள்ளதாகவும், ஏனைய தலைவர்கள் தேர்தல் மேடைகளில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் போது, தான் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டே வருவதாகவும் அவர்



குறிப்பிட்டார்.

உங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் இல்லாத வேளையில் அனைத்து தேவைகளையும் பெற்றுத் தந்தேன். உங்களுக்கு எதிர்பார்ப்புக்கள் இல்லாமல் போன வேளையில் எதிர்பார்ப்புக் களை மீட்டுத் தந்தேன். மக்களின் கஷ்டங்களை வேடிக்கை பார்ப்பது கஷ்டமானதாக இருந்தது.
வேறு எவரும் இந்த பொறுப்பை ஏற்க வராத வேளையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் பொறுப்பை கையளித்தார். சஜித்துக்கும் அநுரவிற்கும் மக்களின் கஷ்டங்கள் புரியவில்லை. மக்கள் கஷ்டத்திலிருந்த வேளையில், இந்த நெருக்கடியில் கைவைக்கமாட்டோம் என்று கூறினர். அவர்களின் மனசாட்சி இன்று என்ன சொல்கிறது. இப்போதுதான் மக்களை பற்றி நினைவு வந்ததா?

இப்போது மக்களுக்கு நிவாரணம் தருவதாக சொல்கிறார்கள். மக்களுக்கு நிவாரணம் தேவைப்பட்ட வேளையில் அநுரவும் சஜித்தும் ஏன் அவற்றை பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் நான் ஐ.எம்.எப் மற்றும் உலக தலைவர்களுடன் பேசி மக்கள் கஷ்டத்தை போக்க வழி செய்தேன்.

கடன் பெறுதல், பணம் அச்சிடுதல் போன்ற செயற்பாடுகளில் ஐ.எம்.எப் சில நிபந்தனைகளை விதித்தது. அதன்படியே விருப்பமின்றி யேனும் வரியை அதிகரித்தோம். எல்லோரும் என்னை திட்டித் தீர்த்தனர். ஆனால் ஆறு மாதங்களில் நாட்டில் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டியது. பொருட்களின் விலை குறைந்திருக்கிறது. நாம் பணத்தை தேடிக்கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கினோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மேலும் அதிகரிக்கவுள்ளோம். வீதியோரங்களில் மூடிக்கிடந்த கடைகளை திறக்க வழி செய்திருக்கிறேன். இவை தற்காலிகமான தீர்வுகள் தான். தற்போதிருக்கும் நிலைபேற்றுத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். நாம் தொடர்ந்தும் கடன் பெறும் நாடாகவே இருக்க முடியாது. எனவே ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு சென்று வருமானத்தை அதிகரிக்க வேண்டும். புதிதாக சிந்தித்து முன்னேற வேண்டும்.

இன்று நான் ஜனாதிபதியாக இருப்பதால் இந்த தேர்தலில் இனவாதமோ, மதவாதமோ பேசப் படவில்லை. மாறாக பொருளாதாரம் பற்றி பேசப் படுகிறது. முஸ்லிம்




மக்களின் முக்கிய பிரச்சினைக்கு தீர்வு தந்திருக்கிறேன். நல்லடக்கம் செய்யும் உரிமையை சட்டத்தினால் உறுதி செய்திருக்கிறேன். முன்னெடுக்க வேண்டிய ஏனைய பணிகளையும் செய்து முடிப்பேன். நான் ஒருபோதும் தேர்தலை இலக்கு வைத்து பேசுவதில்லை.

முஸ்லிம்கள் வர்த்தகம், விவசாயம் செய்கிறார்கள். அவை இரண்டும் இல்லா விட்டால் முஸ்லிம் சமூகம் வீழ்ச்சியடையும். எனவே அவை இரண்டையும் வளப்படுத்தக் கூடியவர் யார் என்பதை முஸ்லிம் காங்கிரஸிடம் கேளுங்கள்.

இன்று வாழ்க்கை சுமை அதிகம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அடுத்த வருடம் வாழ்கை சுமையை குறைப்பதற்கான வழிகளை செய்வேன். இன்று வாழ்க்கைச் சுமை அதிகம் என்று சொல்லும் அநுரவும் சஜித்தும் அன்று ஏன் ஓடிப்போனார்கள். அவர்களிடம் மீண்டும் நாட்டையும் பொருளாதாரத்தையும் வழங்க முடியுமா? வருகின்ற வழியில் ஒரு கடையைக் கண்டேன். அங்கு தடகள போட்டிகளுக்கான நல்ல சப்பாத்துக்கள் உள்ளன. அவற்றை எதிர்க்கட்சியினருக்கு வாங்கிக் கொடுங்கள்.

நான் இப்பகுதியில் விவசாயத்தை மேம்படுத்த எதிர்பார்க்கிறேன். அதற்கான முயற்சிகளை செய்ய வேண்டும். புதிய அரிசி ஆலையை அமைக்க வேண்டும். அரசாங்கம் விவசாயிகளின் உற்பத்திகளை கொள்வனவு செய்யும். கடந்த போகங்களில் மக்களுக்கு பணம் கிடைத்தது. அடுத்த சிறுபோகத்திலும் நல்ல வருமானம் கிடைக்கும். நான் உலக வங்கியுடனும் சமந்தா பவருடனும் பேசியே மக்களுக்கு தேவையான உரத்தை பெற்றுத் தந்தேன். அன்று சஜித்தும் முஸ்லிம் காங்கிரஸும் அதற்காக முன்வரவில்லை.

எனவே இப்பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வழி செய்வேன். ஹிங்குரங்கொட, மத்தளை விமான நிலையங்களை மேலும் பலப் படுத்துவோம். வர்த்தக முதலீட்டு வலயங்களை உருவாக்குவோம். திருகோணமலையை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வோம். டிஜிட்டல் பொருளாரத்தை உருவாக்குவேன். சூரிய சக்தி திட்டம் உருவாக்கப்படும். மீன்பிடித்துறை வளர்ச்சிக்காக துறைமுகம் பலப்படுத்தப்படும் அதற்காகவே மக்கள் ஆணை கோருகிறேன்.

மற்றையவர்கள் அதனை செய்யப் போவதில்லை. சஜித் போகும் இடங்களில் எல்லாம் எல்லாவற்றையும் இலவசமாக தருவதாக வாக்குறுதி அளிக்கிறார். மக்களுக்கு தலைவலியையும் இலவசமாக அவர் தருவார். தேவைப்படும் பட்சத்தில் அவரிடம் கேட்டு வாங்கிக்கொள்ள முடியும். அன்று பயந்தோடியவர்கள் அவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இன்று மீண்டும் வந்திருக்கிறார்கள். நான் மக்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தித்தேன். அதனாலேயே எனது வீட்டுக்கு தீ வைக்கப்பட்டது.

எனவே உங்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சிலிண்டர் சின்னத்து வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது எதிர்காலமும் சிறக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல் - 2024



## கோட்டாவுடன் பக்கபலமாக இருந்தவர்கள் ரணிலுக்கு பின்னால் திரிகின்றனர்

### பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன்



(எச்.எம்.எம்.பர்ஸான் )

அரசியல் அனுபவமில்லாத கோட்டாபாய ராஜபக்சவிடம் நாட்டைக் கொடுத்ததால்தான் நாடு நாசமாகியது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து ஏறாவூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரிஷாட் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் இன்னொருவரிடத்தில் இந்த நாட்டைக் கொடுத்து அதை கட்டியெழுப்ப முடியாது.

மீண்டும் இந்த பொருளாதார-த்தை கட்டியெழுப்ப பல வருடங்கள் தேவையாகவுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாச இனவாதம், மதவாதம் இல்லாத ஓர் அரசியல்வாதி அவர் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை கட்டியெழுப்ப பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்.

நாட்டில் மாற்றம் தேவை என்று சிலர் நினைத்துக் கொண்டு சிவப்புக் கட்சிக்கு பின்னால் அலைந்து திரிகின்றார்கள்.

நாட்டில் மாற்றம் தேவை என்றுதான் சஹ்ரான் போன்ற சக்திகள் உருவாகி பல்வேறுபட்ட குழப்பங்கள் தோன்றின.

ஈஸ்டர் தாக்குதல் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு தந்துள்ள கஷ்டம் போன்று இன்னுமொரு கஷ்டம் வந்து விடாமல் சிவப்புக் கட்சிக்கு பின்னாலுள்ள சகோதரர்கள் புத்திசாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் அநுர பேசிய உரைகளையும் சஜித் பிரேமதாச பேசிய உரைகளையும் நீங்கள் உன்னிப்பாக கேளுங்கள். அதில் நீங்கள் தெளிவடைந்து கொள்வீர்கள்.

ஊழல்களை ஒழிப்போம், கள்வர்களைப் பிடிப்போம் என்று சொல்லும் சிவப்புக் கட்சிக்காரர்கள் ஏன் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் நடக்கும் அநீதிகளை கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர்.

ஜனாதிபதியாக வந்தால்தான்

கள்வர்களை பிடிப்போம் என்பது என்ன நியாயம்! கள்வர்களை பிடித்தது அவர்கள் இல்லை. ஹெகலிய ரம்புக்வெல செய்த கள்ள வேலையை சாதாரண பொது மக்கள் போய் வழக்கு போட்டுதான் சிறையில் அடைத்துள்ளனர்.

கொரோனா ஜனாஸாக்களை எரிப்பதற்கு உடந்தையாக இருந்தவர்கள், கை உயர்த்தியவர்கள் எல்லோரும் ரணிலுக்கு வாக்களிக்க ஒன்றிணைந்திருக்கிறார்கள். கோட்டாவுக்கு பக்கபலமாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ரணிலுக்கு பின்னால் திரிகிறார்கள். ரணிலுக்கும், அநுரவுக்கும் வாக்களித்து விடாதீர்கள். அங்கே இருப்பவர்கள் கள்வர்கள். அவர்களை பிடிக்காமல் பாதுகாப்பவர்கள் மற்றத் தரப்பினர்கள் என்றார்.

## சஜித் பிரேமதாஸவை ஆட்சி பீடமேற்றுவதன் மூலம்தான் தங்களின் விடியலையும், இருப்பையும் முஸ்லிம் சமூகம் தக்கவைத்துக் கொள்ள முடியும்

### கலாநிதி சிராஸ் மீராசாஹிப்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சஜித் பிரேமதாசவை வெல்ல வைப்பதன் மூலம் தான் எங்களுடைய அபிலாசைகளை நாம் வென்றெடுக்க முடியும் என முன்னாள் கல்முனை மாநகர சபை முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சாய்ந்தமருது காரியாலய திறப்பு விழா மற்றும் பொது கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எதிரே வருகின்ற தேர்தலும் மிகவும் முக்கியமான ஒரு தேர்தலாக இருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தினுடைய எதிர்காலம் மற்றும் முஸ்லிம் களுடைய அத்தனை விடயங்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசஸ வை வெல்ல வைப்பதன் மூலம் தான் எங்களுடைய அபிலாசைகளை வென்றெடுக்க முடியும். அது எம்மால் முடியும் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம். நீங்கள் அத்தனை பேரும் சஜித் பிரேமதாஸவை ஆட்சி பீடத்துக்கு அமர்த்துவதன் மூலமாகத்தான் எங்களுடைய விடியலையும், இருப்பையும் முஸ்லிம் சமூகம் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதையும் நீங்களும் மறந்து விடாதீர்கள்.

கடந்த கால கொடுங்கோல் ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு அவர்கள் செய்த துரோகங்களை நீங்கள் மறந்து விடக்கூடாது. கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட அந்த சிறுவர்களைக் கூட விட்டு வைக்காமல் எரித்தார்கள். எங்களுடைய தாய்மார்கள் அழுதார்கள். இறைவனிடம் துஆக் கேட்டார்கள். இந்த அயோக்கியர்களை இறைவா பதவியில் இருந்து துரத்தி விடு என்று சொன்னார்கள். இரண்டு வருடங்கள் கழியவில்லை. அந்தப் பதவியில் இருந்து எங்களுடைய தாய்மார்களின் துஆக்களினால் ஆட்சி பீடங்களிலிருந்து ஏன் நாட்டை விட்டே துரத்தியடிக்கப் பட்டார்கள். அப்படிப்பட்ட நாங்கள் எதையும் மறக்கவில்லை. கொரோனா மாத்திரமல்ல, இந்த நாட்டினுடைய பொருளாதாரச் சீரழிவுகள் போன்றவைகளை நாங்கள் மறக்கவும் இல்லை. மன்னிக்கவும் மாட்டோம்.

நீங்கள் சஜித் பிரேமதாவுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை படித்துப் பாருங்கள். காணி விடயங்களாக இருக்கலாம் அல்லது இளைஞர், யுவதிகளுடைய தொழில் வாய்ப்புகளாக இருக்கலாம் எல்லாவற்றையும் மிகத் தெளிவாக அந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லி இருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

## மக்களின் ஆணையை மீறி கட்சி தாவியோருக்கு பொதுத் தேர்தலிலே தீர்ப்பு

### மன்னாரில் அ.இ.ம.கா தலைவர் ரிஷாட் பதியுதீன்




(எம்.ஏ.ஏ.அக்தார்)

மக்களின் ஆணையை மீறி, கட்சியின் கட்டுக்கோப்பை உடைத்துக் கொண்டு வேறு கட்சிகளில் இணைந்தோரால் எந்தப் பாதிப்பும் ஏற்படாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளு-மன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் நடைப்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எமது கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரும், தவிசாளர் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் பாராளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவுமே எமது கட்சி, மக்களின் ஆணையைக் கோரியது. இதனால் சஜித் பிரேமதாசவுக்கு கணிசமான வாக்குகளை எமது கட்சி பெற்றுக் கொடுத்தது.

பாராளுமன்றத்தில் நான்கு எம்.பிக்களைப் பெறுமளவுக்கு எமது கட்சிக்கு மக்களின் ஆணை கிடைத்தது. இந்த ஆணையை மீறி, இந்த எம்.பிக்கள் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். இவர்களைப் பின்தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறிவிட்டனர்.

மக்களின் ஆணைகளை மீறிய இவர்களை மன்னிக்கவே முடியாது. எதிர்வரும் காலங்களில் இவர்களை மீண்டும் எம்முடன் இணைக்கப் போவதில்லை. இவர்கள் சென்றதால் கட்சியின் வளர்ச்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பத்து எம்.பிக்களைப் பெறுவோம். அந்தளவுக்கு மக்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது.

கோட்டாவின் சகாக்களைப் பாதுகாக்கவே இவர்கள் ரணிலுடன் இணைந்துள்ளனர். கடந்தகால ஊழல்வாதிகளும் அமைச்சர்களும் தங்களைப் பாதுகாப்பதற்கே, ரணிலை வெல்லவைக்கப் பார்க்கின்றனர். சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவர்.

ரணில் விக்ரமசிங்கவும் அனுரகுமார திஸாநாயக்கவும் இரவில் இரகசியமாக பேசிக்கொள்கின்றனர். வெவ்வேறாகப் போட்டியிடுவோர் ஏன் பேச வேண்டும்? வெற்றியைத் தக்கவைப் பதற்கான வழிகளையே இவ்விருவரும் ஆராய்கின்றனர்.

# சஜித் ஏன் தோற்கடிக்கப்பட வேண்டும்?

சிராஜ் மஷ்ஹூர்



**சஜித்** பிரேமதாஸ ஒரு பலவீனமான தலைவர் என்ற கருத்து அரசியல் வட்டாரங்களில் மிகவும் பிரபல்யமானது.

ஆழமாக சிந்தித்துப் பேசாமல், கருத்துகளை மேம்போக்காக அடித்து விடுபவர் என்று பெயரெடுத்திருக்கிறார். அவரது ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளே அதற்குச் சான்று.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன் என்பதை ஒரு முக்கிய தகுதியாக அவர் முன்னிறுத்துகிறார்.

**"வாரிசு அரசியல்" பெரிதாக ஒன்றையுமே கொண்டு வராது.**

யாரும் யாருடைய வாரிசாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், அதைவிட தலைமைத்துவப் பண்புகளும் ஆளுமையும் மிக முக்கியமானவை.

**நாட்டை ஆள, சஜித்தின் ஆளுமை போதாது என்பதே பலரது கணிப்பு.**

பிரேமதாஸவுக்கு வீடமைப்பு, (குறைபாடுகள் நிறைந்த) வறுமை ஒழிப்புத் திட்டம் (ஜனசவிய), ஒடுக்கப்பட்டவராக இருந்து அதிகாரக் கட்டமைப்பில் மேலெழுந்தது போன்ற சில நல்ல பக்கங்கள் இருப்பது போலவே,மிகவும் கசப்பான கறைபடிந்த வரலாறும் இருக்கிறது.

1990 இல் புலிகளின் கை ஓங்குவதற்கு, பிரேமதாஸ கொடுத்த ஆயுதங்களும் முக்கிய காரணம்.

1990 இல் இடம்பெற்ற காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் படுகொலை உள்ளிட்ட முஸ்லிம்களுக்கு எதிரான அத்தனை அடுக்கடுக்கான கலவரங்களுக்கும் பிரேமதாஸவின் அப்போதைய அரசியல் அணுகுமுறையும் ஒரு முக்கிய காரணம்.

இது இவ்வாறிருக்க, பூகோள அரசியல் சக்திகள் (Geo-political Forces), பலவீனமான தலைவர் ஒருவரையே விரும்புகின்றன. சஜித்தை வெற்றிபெறச் செய்தால், அவரை இலகுவாகக் "கையாளலாம்" என அவை கணக்குப் போடுகின்றன.

பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ள இலங்கைக்கு இது மிக ஆபத்தானது.

சஜித்தோடுதான் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் பல கைகோர்த்திருக்கின்றன. இதற்கு தங்களது இருப்பைத் தக்க வைப்பது, சுயநல அரசியல், பூகோள அரசியல் அழுத்தங்கள் என்று பல காரணங்கள் உள்ளன.

மக்களது காதில் சும்மா பூச்சுற்ற முடியாது என்பதை இம்முறை இந்தக் கட்சித் தலைவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்துள்ளனர். அதனால்தான் அவர்களது உரைகளில் உப்புச் சப்பில்லை நிலைப்பாடுகளில் தெளிவில்லை.

அவற்றில் அரசியல் சாரத்தை வடித்துத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது. அடிப்படைகளை வேண்டுமென்றே மறந்து, சும்மா கம்பு சுத்துகிறார்கள்.

இன்னொன்று, சஜித்துடன் கைகோர்த்திருக்கும் பாட்டலி சம்பிக்க ரணவக்க பற்றிய விடயம். இவர் குறித்து நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தந்தையாக அநகாரிக தர்மபாலவைக் குறிப்பிடுவர். அதன் நவீன அல்லது இந்தக் காலத்து முகம்தான் சம்பிக்க.

சம்பிக்க கெட்டிக்காரர். ஆனால், மிக மோசமான பேரினவாத அழுக்கை மனதில் புதைத்து வைத்திருப்பவர். சிறுபான்மை மக்களின் மீதான கருத்தியல் வன்மம் கொண்டவர். தேர்தல் தேவைக்காக அதை அடக்கி வாசிக்கிறார் என்பதுதான் உண்மை நிலவரம்.

சிங்கள அபியோகய (சிங்கள சவால்), கொட்டி வினிவிதீம (புலிகள் பற்றிய உள்நோக்கு), நெகநெஹிர சிங்கள உருமய (கிழக்கின் சிங்கள மரபுரிமை), அல்ஜிஹாத் அல்காயிதா உள்ளிட்ட பல புத்தகங்களை எழுதியவர்.

இலங்கையில் இஸ்லாமிய வெறுப்பு, நிறுவனமயப்படுவதற்கான கருத்தியல் தளத்தையும் செயற்பாட்டுத் தளத்தையும் வலுப்படுத்தி வளர்த்தெடுத்து வருபவர்.

சம்பிக்கவின் அடுத்த இலக்கு ஜனாதிபதி கதிரையில் அமர்வதுதான். "ஜனதா மிதுரோ" என்று தொடங்கி, இன்னொரு கட்டத்தில் "ஜாதிக ஹெல உறுமய" கட்சியை உருவாக்கியவர்களுள் இவர் முதன்மையானவர்.

பின்னர் இந்தக் கட்சிக்கு பல தடவை பெயர் மாற்றினார். ஒரு கட்டத்தில் "43 பலகாய" (இலவசக் கல்வி தொடங்கிய ஆண்டும் அதனால் பயனடைந்த தலைமுறையும்) என்று இயங்கினார்.

இப்போது புதிய கட்சிப் பெயரோடு வந்திருக்கிறார். தேர்தலுக்கு முன் சுகததாஸ ஸ்டேடியத்தில் சுமார் 5000 பேரை ஒன்றுகூட்டி, தனது கட்சி மாநாட்டை நடத்திக் காட்டினார். தன்னை ஒரு பெரும் சக்தி என்று காட்டும் "பிம்ப அரசியல்" முனைப்பு அது.

பலவீனமடைந்து குழம்பிப் போன இலங்கை அரசியல் குட்டையில், மீன்பிடிக்க வந்திருப்பவர்தான் இந்த சம்பிக்க.

இவருக்கென்று பலமான வாக்கு வங்கி கிடையாது. அதனால், மாறி மாறி பல கட்சிகளோடு இணைந்துதான் தேர்தலை எதிர்கொள்கிறார்.

சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி (SJB) சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி இவர். ஒருகட்டத்தில் சஜித்திடமிருந்து விலகி, சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்தார்.

ரணிலோடு சேர்ந்து, அவருக்குப் பின் அந்த வாக்கு வங்கியைக் கைப்பற்றுவது இவரது எண்ணமாக இருந்தது. ஆனால், அது அவருக்குக் கைகூடவில்லை.

அடுத்த கட்டமாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு தூதனுப்பினார். மொட்டின் வேட்பாளராக மாற ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதுவும் அவருக்கு சாத்தியப்படவில்லை.

இப்போது மீண்டும் சஜித்துடன் இணைந்திருக்கிறார். சஜித்துக்கும் சிங்களத் தேசியவாத வாக்குகளைப் பெறும் முகமொன்று தேவை. இல்லாவிட்டால், பெரும்பான்மை மக்கள் நிராகரித்து விடுவார்கள் என்ற பயம் அவருக்கு. அதனால்தான் இருவருக்கும் பரஸ்பரம் நன்மை பயக்கும் 'Win-Win formula' வாக இந்தத் தேர்தல் கூட்டு அமைந்திருக்கிறது.

களுத்துறை மாவட்டம் புளத்சிங்களவில் பிறந்த மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியலாளரான சம்பிக்க, இப்போது தருணம் பார்த்துக் காத்திருக்கிறார்.

"ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவு காத்திருக்கும் கொக்குதான்" இந்தச் சம்பிக்க.

"அண்ணன் எப்போ போவான்? திண்ணை எப்போ காலியாகும்?" - இதுதான் அவரது இப்போதைய மனக் கணக்கு.

இந்த சந்தர்ப்பத்தில் ,ஞானசார தேரர் சஜித்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பதையும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

ஆக, சஜித் வென்றால் இவர்களது அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்வதற்கான வாயில்கள் திறக்கும்.

நீறுபூத்த நெருப்பாக இருக்கும் இனவாதம் என்ற ஆயுதத்தை அவர்கள் மீண்டும் கையில் எடுப்பார்கள்.

பலவீனமான சஜித்தை அடுத்தடுத்த தேர்தல்களில் தன்னால் மேவ முடியும் என்பதுதான் சம்பிக்கவின் தந்திரோபாய நகர்வினதும் அணிச்சேர்க்கையினதும் உள்ளரசியல்.

இது வெல்லுமா தோற்குமா என்பது வேறு விடயம். ஆனால், சஜித்தின் வாக்கு வங்கியிலும் வெற்றியிலும், தான் "குதிரை ஓடலாம்" என்று கணிக்கிறார் சம்பிக்க.

ஆக, சஜித்தைத் தோற்கடிப்பதன் மூலம் சம்பிக்க தலைமையிலான இனவாத அணியையும் தோற்கடிக்க வேண்டும்.

ஆழ்ந்து சிந்திப்போர் இதிலுள்ள தர்க்க நியாயத்தை நன்கு புரிந்துகொள்வர்.

கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் உள்ளிட்ட, இவைபோன்ற இன்னோரன்ன பல காரணிகளால், சஜித்தைத் தோற்கடிப்பதே நமக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லது

sportsml77@gmail.com

# SPORTS லீடர்

## கல்முனை சாஹிரா மாணவன் ஆதீப் தங்கப் பதக்கம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு



-எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர்-

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணபாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் (11) செவ்வாய்க்கிழமை கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஜே.எம். ஆதிப் 16 வயது ஆண்கள் பிரிவில் 4X400 M அஞ்சலோட்ட நிகழ்ச்சியில் தங்கப் பதக்கத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளதோடு, தேசியமட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளார். இவ் வெற்றிக்காக உறுதுணையாய் இருந்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் மற்றும் பிரதி, உதவி அதிபர்கள், மாணவர்களை வழிநடத்தி, பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.அப்ராஜ் றிழா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம்.யூ.ஏ. சம்லி, ஏ.எம்.ஜப்ரான் போட்டியில் பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டி, வெற்றி பெற்ற மாணவனுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற்கொண்ட பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழு மற்றும் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

## மாத்தளை ஸாஹிராக் கல்லூரி சம்பியன்



-அஸ்ஹர் இப்றாஹிம்-

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் 17 வயதுக்குட் பட்டோருக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் லீக் தொடரின் இறுதி ஆட்டத்தில் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி சம்பியனானது. மாத்தளை ஸாஹிராக் கல்லூரிக்கும் மாத்தளை ஸ்ரீமாவோ பண்டாரநாயக கல்லூரிக்கும் இடையே மாத்தளை சென் .தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பாடிய மாத்தளை ஸாஹிரா கல்லூரி அணி 34.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாத்தளை ஸ்ரீமாவோ பண்டாரநாயக கல்லூரி அணி 47.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை பெற்றனர். 45 ஓட்டங்களால் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. மாத்தளை ஸாஹிராக் கல்லூரியானது மாத்தளை சிங்கள பௌத்த கல்லூரி அணி, மாத்தளை கிறிஸ்துதேவ கல்லூரி, மாத்தளை நாவுல ஸ்ரீநாக கல்லூரி ,மாத்தளை கைக்காவல மத்திய கல்லூரி, மாத்தளை ஸ்ரீமாவோ பண்டாரநாயக கல்லூரி என்பவற்றை வெற்றி கொண்டதன் மூலம் மாத்தளை மாவட்ட குழுநிலை சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் 02 தங்கம் வென்று சாதனை






-எம்.எஸ்.எம்.ஸாகிர்-

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024இல் இரண்டாவது நாளான (08) ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் எம்.எச். முஹம்மது ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 60m (8.04Sec MMR- 2024) மற்றும் 100M (13.30Sec -2024) ஆகிய இரண்டு ஓட்ட நிகழ்ச்சிகளிலும் முதலிடங்களைப் பெற்று 02 தங்கங்களை வென்றுள்ளார். பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர், வெற்றி பெற்ற மாணவனை வாழ்த்துவதோடு, இதற்காக உழைத்த அனைத்து விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கும் இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து ஒருங்கிணைக்கும் உதவி அதிபர்கள், மாணவனின் பெற்றோர்கள் உட்பட்ட கல்வி சார் மற்றும் சாரா சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

## நண்பர்களின் கிரிக்கட் போரில் தெல்லிப்பளை மகாஜனா பழைய மாணவர் அணி சம்பியன்







-அஸ்ஹர் இப்றாஹிம்-

யாழ்ப்பாணம் ,தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி பழைய மாணவர் அணிக்கும், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் அணிகளுக்கிடையே நடைபெற்ற நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் ரீ 20 கிறிக்கட் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா பழைய மாணவர் அணி 130 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை மகாஜனா அணி 20 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் அணி 18.5 ஒவர்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் 130 ஓட்டங்களினால் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் அணி வெற்றி பெற்றது.

## கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் வரலாற்றுச் சாதனை படைத்த கல்முனை பஹ்ரியா



- நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹிம்-

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்து முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயம் 5 தங்கப் பதக்கங்களையும் ,5 வெள்ளிப் பதக்கங்களுடன், 3 போட்டியில் கிழக்கு மாகாண மட்ட புதிய சாதனை, மற்றும் ஆண்களுக்கான அஞ்சலோட்டப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14இல் அமைந்துள்ள மெ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.09.14ஆம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.